குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்

எஸ்.டி.சி. எண்.395/2020

நாள் 27.11.2024

வா.சா.1 கோபிநாத்

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டிருக்கிறேன் என்றால் என்னிடம் வாங்கிய பணத்தை திருப்பி கொடுப்பதாக சொல்லி காசோலை கொடுத்து அது வசூலாகாமல் திரும்பியதால் பணத்தை வசூலித்து தர சொல்லி கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன். புகாரையும் நிரூபண பிரமாண வாக்குமூலத்தையும் படித்து பார்த்து புரிந்து கொண்டு தான் கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு 17 நாட்கள் காலதாமதம் ஆனதால் அதனை மன்னித்து வழக்கை ஏற்றுக்கொள்ள சொல்லி தனியாக மனுவை தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரியல்ல எனக்கு தெரியவில்லை. நான் 17 நாட்கள் காலதாமதமாக இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. எதிரிக்கு என்ன காரணத்திற்காக பணம் கொடுத்திருக்கிறேன் என்று மனுவில் சொல்லியிருக்கிறேனா என்றால் அவரது சொந்த தேவைக்காக கொடுத்திருப்பதாக சொல்லியிருக்கிறேன். எதிரி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் 2, 3 தொழில்கள் செய்கிறார் கெமிக்கல் தொழிலும் செய்கிறார். எதிரி சக்தி பாலிமர் என்ற பெயரில் கூட்டாண்மை நிறுவனம் நடத்துகிறார் என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு எத்தனை சகோதரிகள் என்றால் 3 சகோதரிகள். எனக்கு வி.ஆர்.தமிழ்செல்வனை தெரியுமா என்றால் தெரியும் அவர் எனது அக்கா சாந்தியின் கணவர் ஆவார்.

எதிரியும் வி.ஆர்.தமிழ்செல்வனும் சேர்ந்து சக்தி பாலிமர் என்ற கூட்டாண்மை நிறுவனத்தை நடத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல என் அக்கா கணவர் பல தொழில்கள் செய்கிறார் எனக்கு தெரிந்த வகையில் பிலிம் டிஸ்டிரிபியூட்டராக இருக்கிறார். எதிரிக்கும் எனக்கும் எந்த பரிச்சயமும் இல்லை என்பதால் தான் அவர் என்ன தொழில் செய்து வருகிறார் என்பது பற்றி எனக்கு தெரியவில்லை

என்றால் சரியல்ல நான் எதிரியின் வீட்டிற்கே சென்றிருக்கிறேன் எதிரியும் எனது வீட்டிற்கு வந்திருக்கிறார். அப்படியிருக்கையில் எப்படி பரிச்சயம் இல்லாமல் போகும். எதிரி என்னிடம் அவருடைய வியாபார தேவைக்காக நான் கடன் கொடுத்திருப்பதாக வழக்கு தாக்கல் செய்திருக்கும் நிலையில் அவர் என்ன தொழில் செய்கிறார் என்பதை குறித்தே என்னால் சொல்ல முடியாததற்கு காரணம் அவர் எனக்கு பரிச்சயம் இல்லாத நபர் என்பதாலும் நான் பொய் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்பதால் தான் என்றால் சரியல்ல அவர் அவசர குடும்ப தேவைக்கு கடன் வாங்கியதாகத்தான் சொல்லியிருக்கிறேன்.

நான் புகாரில் 3வது பக்கத்தில் Urgent Business and Family needs க்காக கடன் கொடுத்திருப்பதாக சொல்லிவிட்டு தற்போது குடும்ப தேவைக்கு கடன் கொடுத்ததாக மாறுபட்டு சொல்லுவதிலிருந்தே நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்பது தெரிய வருகிறது என்றால் சரியல்ல சாட்சி Family needs என்றால் குடும்ப தேவை என்கிறார். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்ட பின்னர் அவர் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்று புகாரில் சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம். புகாரில் 5ம் பத்தியில் எதிரி அறிவிப்பை 05.03.2019ம் தேதி பெற்றுக்கொண்டதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் ஆமாம். நான் NRI என்றால் இல்லை Non Residential External ஆவேன். நான் வெளிநாட்டில் தங்கியிருந்து வேலை பார்க்கிறேன். நான் தாக்கல் செய்திருக்கும் ம.சா.ஆ.7 ஆவணம் Bank statement Net copy என்றால் ஆமாம். ம.சா.ஆ.7ல் 11.03.2020ம் தேதியிட்ட ஆவணம் என்று சொல்லும் நிலையில் மேற்படி ஆவணத்தில் மேற்படி தேதி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் நான் அந்த ஆவணத்தில் பரிவர்த்தனை செய்ததாக சொல்லி தாக்கல் செய்யவில்லை அந்த தேதியில் எனது வங்கிக் கணக்கில் ரூ.70லட்சம் என்பதை காட்டுவதற்காக தாக்கல் செய்திருக்கிறேன். ரூ.20லட்சம் எதிரிக்கு கொடுக்க தகுதியானவன் என்பதை காட்டுவதற்காக அதை தாக்கல் செய்திருக்கிறேன். ம.சா.ஆ.7ல் வங்கியினுடைய முத்திரையோ வங்கி அலுவலருடைய கையெழுத்தோ மேற்படி ஆவணம் வங்கியிலிருந்து எடுக்கப்பட்டது என்பதற்கு சான்று எதுவுமில்லை என்றால் சரிதான்.

இந்த காலகட்டத்தில் அனைத்து ஆவணங்களுமே கம்ப்யூட்டர் ஜெனரேட்டடு ஆவணங்கள் ஆகும். எனவே நான் கணினியின் வழியாக பதிவிறக்கம் செய்து எடுத்ததால் அதில் மேற்கண்டவைகள் இல்லை. இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 65 (B)(iv) ன்படி ம.சா.ஆ.7 குறியீடு செய்ய தகுதியில்லாத ஆவணம் என்றால் சரியல்ல. வங்கியர் புத்தக சட்டப்பிரிவு 2(A)ன்படி வங்கியிலிருந்து எடுக்கப்படும் ஆவணங்கள் வங்கி அதிகாரியால் சான்றொப்பமிடப்படவேண்டும் என்றாலும் சான்றொப்பமிடப்படாத ஆவணங்கள் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளத்தக்கவை அல்ல என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் 09.11.2018ம் தேதியில் தொகை எதுவும் இருப்பதாக ம.சா.ஆ.7ல் காணப்படவில்லை என்றால் சரியல்ல இவ்வளவு பணம் என் வங்கியில்இருந்தது என்று காட்டத்தான் அதை தாக்கல் செய்திருக்கிறேன். வங்கியிலேயே இவ்வளவு பணம் வைத்திருக்கும்போது என் கையில் எவ்வளவு பணம் வைத்திருப்பேன் என்று சாட்சி கூறுகிறார். நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லும் தேதியில் என் கையிருப்பில் தொகை எதுவுமில்லை என்றாலும் சரியல்ல. என்னுடைய வருமான வரி கணக்கை தாக்கல் செய்ய சொல்லும்படி கேட்டு குவிமுச 91ன் கீழ் மனு தாக்கல் செய்தபோது வழக்கு விசாரணையின்போது அதை தாக்கல் செய்வதற்காக அதற்கு பதில் சொல்லிவிட்டு தற்போது அதை தாக்கல் செய்யவில்லை என்றால் நான் வருமான வரியே செலுத்துவதில்லை NRE க்கு வருமானவரி செலுத்தவேண்டிய அவசியமில்லை. எனவே தாக்கல் செய்யவி'ல்லை.

ரூ.20லட்சம் எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லும் நிலையில் அதை வருமான வரி கணக்கில் காட்ட வேண்டுமென்றால் எனக்கு ஏதாவது இந்த தொகையிலிருந்து வருமானம் வந்தால் நான் வருமானவரி கணக்கில் அதை காட்டவேண்டும். எதிரி இந்த தொகையை எனக்கு வட்டியோடு செட்டில் செய்தால் எனக்கு லாபம் வந்தால் மட்டுமே அபராதத்தோடு கட்டவேண்டும், எதிரி எனக்கு கட்டும்பட்சத்தில் மட்டுமே வருமானவரி கணக்கில் அபராதத்தோடு செலுத்திக்கொள்ளலாம் என்று எனது ஆடிட்டர் சொல்லிவிட்டார். நான் அபராதத்தோடு செலுத்திக்கொள்கிறேன் என்று சொல்லுவதிலிருந்தே எனதுவருமான வரி கணக்கில் அதை காட்டவேண்டுமென்று தெரிய வருகிறது

என்றால் சரியல்ல. வருமான வரிச்சட்டப்பிரிவு 68ன்படி கணக்கில் காட்டப்படாத வருமானமிருந்தால் அதற்கு தண்டனை அனுபவிக்க வேண்டுமென்றால் சரியல்ல எனக்கு லாபம் வந்தால் அபராதத்தை கட்டிவிட்டு வருமானவரி செலுத்திவிடுவேன். எதிரி எனக்கு நண்பரும் உறவினரும் இல்லாத நிலையில் ரூ.20லட்சம் அளவிற்கு ஒரு பெரிய தொகைக்கு வட்டி எதுவுமில்லாமல் கொடுத்ததாக சொல்லுவது நம்பும்படியாக இல்லையென்றால் சரியல்ல.

எனது சகோதரியின் கணவர் தமிழ்செல்வனும், எதிரி பாலச்சந்தரும் ஒன்றாக சேர்ந்து தொழில் செய்து வந்த வகையில் பிரச்சனை ஏற்பட்டு காவல் நிலையம் வரை சென்று CSR–ம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. இந்த வழக்கின் காசோலை எண் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் இருக்கிறதா என்றால் 5 வருடங்களானதால் எனக்கு காசோலை எண் தெரியவில்லை. வெள்ளிபாளையம் காவல் நிலையத்தில் CSR No.263/2019 ல் இந்த வழக்கின் காசோலை எண்ணான 771448 மற்றும் மற்றொரு காசோலை எண்ணான 771449 என்ற காசோலையையும் நிறுவனத்தில் பூர்த்தி செய்யப்படாமல் மறந்து வைத்துவிட்டதாகவும் அதனை எனது சகோதரியின் கணவர் எடுத்துக்கொண்டு தர மறுப்பதாக சொல்லி தான் மேற்படி CSR பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. அந்த CSR ஐ பதிவு செய்த காவல் ஆய்வாளரை அழைத்து விசாரிக்க எனக்கு ஆட்சேபணையில்லை என்றால் தனக்கு அதைப்பற்றி எதுவும் தெரியாது என்று சாட்சி கூறுகிறார்.எனது சகோதரியின் கணவர் வி.ஆர்.தமிழ்செல்வனை இதுகுறித்து விசாரிக்க எனக்கு ஆட்சேபணையில்லையா என்றால் சாட்சி அதைப்பற்றி தனக்கு தெரியவில்லை என்றும் வேண்டுமானால் நீங்கள் விசாரித்துக் கொள்ளுங்கள்என்றும் கூறுகிறார். வழக்கு காசோலையில் உள்ளது எதிரியின் கையொப்பமில்லை என்றாலும் மற்ற விவரங்கள் எழுதியிருப்பதும் எதிரியின் கையொப்பமில்லை என்றாலும் இந்த காசோலை என்னால் பொய்யாக ஜோடிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. இந்த வழக்கு காசோலை பெற்றுக்கொள்ளவும் எனது பெயரில் வைத்துக்கொள்ளவும் அதில் பணபரிமாற்றம் செய்யவும் எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

என்னிடம் கடன் வாங்கி காசோலை கொடுத்த நிலையில் அவர் எனக்கு பணத்தை கொடுக்க வேண்டும். சட்டப்படியில்லாத காசோலைக்கு அறிவிப்பு கொடுக்கவே எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.2 ஆவணத்தில் வங்கி கிளையின் முத்திரையோ வங்கி அலுவலரின் கையெழுத்தோ இல்லாத நிலையில் அது சான்றிட மதிப்பில்லை என்றால் சரியல்ல. நான் இந்தியாவிலேயே கிடையாது என்றாலும் வழக்கு காசோலை எனக்கு கொடுக்கப்படவில்லை என்றாலும் வழக்கு காசோலைக்கு மறுபயன் எதுவுமில்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கிற்கு தபால் மூலமாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. போலியான ஆவணங்களை கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.7ன் பரிவர்த்தனைகள் தொடர்ச்சியானவைகள் அல்ல என்றால் சரியல்ல. நான் பணம் கொடுக்கவில்லை என்பதால் தான் அதனை வருமான வரி கணக்கில் காட்டவில்லை என்றாலும் நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை